# இயேசுவேவாரும்

காலேப் யோசுவா
செல்: 9444701953, 9444709980
மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com
வலைத்தளம்: www.yesuvaevaarum.com
முகநூல்: www.facebook.com/yesuvaevaarum

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.வெளி.22.20

32,ஜெமிஎத்திராஜ் நகர்,
எரையமங்கலம் ரோடு,
மப்பேடு, பேரம்பாக்கம் (வழி)
திருவள்ளூர் மாவட்டம் - 631402

## 1. பற்பல பாஷைகளைப் பேசுதல் – Speaking in various kinds of Tongues.

## 2. அந்நிய பாஷையில் பேசுதல் – Speaking in an unknown Tongue.

## இதுகுறித்து சிந்திக்க, செயல்பட ஒரு நிருபம்

1. ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே கீழ்ப்படிதலுக்கும், இயேசு துவக்கிய விசுவாசத்தை கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு கர்த்தரால் அவருடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய சுவிஷேகனாக ஏற்படுத்தப்பட்ட காலேப் யோசுவா எழுதிகிறதாவது : கிருபையும் சமாதானமும் உங்களுக்கு பெருகக்கடவது.

2. பற்பல பாஷைகளை பேசுதலை குறித்தும் (1கொரி.12:10) அந்நிய பாஷையில் பேசுதலை குறித்தும் (1கொரி.14:2) நீங்கள் அறிய வேண்டியது என்னவென்றால் : பூமியெங்கும் ஒரே பாஷையும் ஒரே விதமான பேச்சும் இருந்தது (ஆதி.11:1) பாபேலில் கர்த்தர் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு அவர்கள் பாஷையை தாறுமாறாக்கினார். அதோடு மட்டுமல்ல, கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறி போகப்பண்ணினார். (ஆதி.11:7,8) நியாயத்தீர்ப்பு மக்கள் மேல் விழுந்தது. இப்பொழுது இந்த உலகத்திலே எத்தனையோ விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது. அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல. (1கொரி.14:10) இப்பொழுது இந்த பூமியில் சுமார் 6500 பாஷைகள் இருக்கிறது என அறிய வந்தேன். இவைகள் யாவும் மனுஷர்கள் பேசும் பாஷைகள் (1கொரி.13:1) Tongues of Men. இவைகளில் பற்பல பாஷைகளில் ஒருவர் பேசினால், அது அவருக்கு அருளப்பட்ட ஆவியினுடைய அநுக்கிரகம் (1கொரி.12:10,7). மனுஷர்கள் பேசும் பாஷைகளில் அதிகமானதை நீங்கள் அறிந்து கொள்ள வாய்ப்பில்லை, புரிந்து கொள்ளவும் முடியாது. மேலும் இது கூடாத காரியமுமாகும். நீ அறியாத பாஷையை பேசும் ஜாதி, அவர்கள் பேசுவது உனக்கு இன்னதென்று தெரியாது. Languages thou knowest not neither understand what they say என எரே.5:15-ல் வாசிக்கிறோம்.

3. நீங்கள் அறியாத அநேக பாஷைகள் சில நாட்டினருக்கு அவர்கள் அறிந்த பாஷையாக இருக்கும். அவர்கள் தங்கள் நாட்டு பாஷையை நன்கு அறிந்து, புரிந்து பேச முடியும். ஏனென்றால் அது அவர்களுடைய ஜென்ம பாஷை That is their own tongue (அப்.2:8) இதை நாம் நம்முடைய தாய்மொழி Mother Tongue என அழைக்கிறோம். இப்பொழுது கவனியுங்கள், பெந்தேகொஸ்தே நாளன்று சீஷர்கள் சுமார் 120 பேர் கலிலேய பாஷையில் பேசினார்கள். அதாவது எபிரேயர் பாஷையில் பேசினார்கள். அதை அங்கு கூடியிருந்த 17 நாட்டினர்கள் அவரவர்களுடைய ஜென்ம பாஷையில் கேட்டார்கள். அதாவது 120 சீஷர்கள் பேசியதை தங்கள் தங்கள் தாய்மொழியில் கேட்டார்கள். இவைகள் யாவும் மனிதர்கள் பேசும் பாஷைகள். இந்த 17 நாட்டினரில் ஒரு நாட்டினரின் பாஷையை மற்றொரு நாட்டினர் அறியாதிருக்கலாம். அது நாம் எரே.5:15-ல் தியானித்தபடி அவர்கள் அறியாதிருக்கிற ஒரு பாஷையாகும். Language not known. ஆனால் அது அவர்களுக்கு அந்நிய பாஷை (unknown tongue) அல்ல. இங்கு ஒருவர் அறியாத பாஷை, மற்றொருவருக்கு ஜென்மபாஷை, தாய் பாஷை ஆகும். மனிதர்கள் பேசும் 6,500 பாஷைகளில், தமிழ் எனக்கு ஜென்மபாஷை/தாய்பாஷை. ஆனால் மற்றொருவருக்கு தமிழ் அந்நிய பாஷை அல்ல (unknown Tongue) மாறாக அவன் அறியாத மனுஷர் பாஷைகளில் ஒன்று (Languages not known).

4. சபையில் ஒருவர் தமிழில் பிரசங்கம் பண்ணுகிறார். ஆனால் அந்த சபையில் ஆந்திரா, மலையாளம், கர்நாடகா போன்ற பாஷைகளை ஜென்ம பாஷையாக கொண்டவர்கள் உண்டு. இப்பொழுது பற்பல பாஷைகளை பேசும்

வரம் எவ்வாறு கிரியை செய்கிறது என்பதை கவனியுங்கள். செய்தியாளர் – தமிழர் – தன் ஜென்ம பாஷையாகிய தமிழில் பேசுகிறார். இப்பொழுது அவரிடமிருந்து பற்பல பாஷைகளை பேசும் வரம் கிரியை செய்கிறது. செய்தியாளர் தமிழில் பிரசங்கிக்க அவருக்கு முன் அமர்ந்திருக்கும் ஆந்திரா, மலையாளம், கர்நாடகா விசுவாசிகள் யாவரும் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில் கேட்கிறார்கள். இதுதான் பற்பல பாஷைகளை பேசும் வரம், வெவ்வேறு பாஷைகளை பேசும் வரம், பாஷைகளை பேசும் வரம் ஒருவரிடத்திலிருந்து கிரியை செய்வதாகும். இப்பொழுது இவர்கள் மனுஷர் பாஷையை தங்கள் தங்கள் ஜென்மபாஷையில் பேசக் கேட்டார்கள். ஆதலால் இவர்களுக்கு இங்கு அர்த்தம் சொல்ல யாரும் தேவையில்லை. ஏனென்றால் இங்கு பேசப்பட்ட பாஷை, கேட்கப்பட்ட பாஷை மனுஷர் பேசும் பாஷைகளில் ஒரு சிலவாகும். இது கொடுக்கப்பட்ட செய்தியை அறியாத பாஷை. Language not known ஆகும். ஆனால் அந்நிய பாஷை (unknown tongue) அல்ல. இந்த பற்பல பாஷைகளை பேசும் வரமானது மனுஷர் பேசும் பாஷைகளில் ஒன்றை அதை அறியாதவர் பேசுவது வரமாகும். மனுஷரால் பேசப்படும் பாஷை ஒன்றில் ஒருவர் பேச, அந்த பாஷையை அறியாத மற்றொருவர் அதை தனது ஜென்ம பாஷையில் கேட்பதாகும். உதாரணமாக ஐ.நா. சபையை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கு உலகில் உள்ள பல நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். அவர்களுடைய பாஷையும் வெவ்வேறாக இருக்கும். ஒருவர் பாஷையை மற்றொருவர் அறிந்து, புரிந்து கொள்ளவும், பேசவும் முடியாது. ஆனால் ஒரு பிரதிநிதி தன் ஜென்ம பாஷையில் பேசுகிறதை இதர நாட்டு பிரதிநிதிகள் அனைவரும் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில் கேட்கத்தக்கதாக அது உடனுக்குடன் மொழிபெயர்ப்பு செய்யப்படும். கேட்பவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில் கேட்பார்கள். இதுதான் அன்று அப்.2அதியில் நடந்த தேவனுடைய மகத்துவம். ஆனால் இன்று அது விஞ்ஞானத்தின் சாதனை ஆகிவிட்டது.

5. அடுத்து அந்நிய பாஷை என்றால் என்ன?
இன்று பற்பல பாஷைகளை பேசும் வரம் கிரியை செய்ததையும் அந்நிய பாஷை வரம் கிரியை செய்ததையும் அறிந்து, புரிந்து கொள்ள முடியாத நிலையில் உங்கள் மதத்தலைவர்கள், பிஷப்கள், தலைமை போதகர்கள், இண்டர்நேஷனல் பிரசங்கிகள், B.Th., M.Th., Doctor, B.E., போன்ற படித்த மேதாவிகள் (இங்கு நான் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரன் என கூறிக்கொண்டு தங்கள் லௌகிக பட்டங்களை பிரஸ்தாபப்படுத்தும் மேதாவிகளை குறிப்பிடுகிறேன்) தங்களை தாங்களே ஏமாற்றி கொள்வதோடு மாத்திரமல்ல, தங்கள் வார்த்தைக்கு செவிகொடுக்கும் வலதுகைகளும், இடதுகைகளும் வித்தியாசம் தெரியாத மக்களை வஞ்சித்து, அவர்களையும் தங்கள் மார்க்கத்தானானபோது அவர்களை தங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறார்கள்.

6. அந்நிய பாஷை (unknown tongue) என்பது மனுஷர்களுடைய பாஷை அல்ல. இது மனுஷர்கள் பேசும் 6500 பாஷைகளில் ஒன்றாக அடங்காது. இது மனுஷர்களுக்குள் ஒருவரும் அறியாத பாஷையாகும். ஆக அந்நிய பாஷையென்பது மனுஷரால் பேசப்படாததும், மனுஷர் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளை கொண்ட பாஷை (2கொரி.12:3) இது இந்த பூமியில் அல்ல, மாறாக மூன்றாம் வானத்தில் பேசப்பட்டதொரு பாஷை. முதலாவது மேகங்களின் கூட்டம். இரண்டாவது நட்சத்திர மண்டபம். மூன்றாவது தேவனுக்கும் தேவ தூதர்களுக்கும் உரிய இருப்பிடம். அது பரலோகம் (Abode of God). அந்நிய பாஷை குறித்து 1கொரி.14:2-ல் வாசிக்கிறோம். அந்நிய பாஷையில் (unknown Tongue) பேசுகிறவன் ஆவியினால் இரகசியங்களை பேசுகிறான். பாருங்கள் அவன் பேசுகிறதை ஒருவரும் அறியாதிருக்கிறார்கள். கவனியுங்கள் அவன் பேசுகிறதை இந்த பூமியில் உள்ளவர்களில் ஒருவனும் அறிந்து, புரிந்து கொள்ள முடியாது. ஏனென்றால் அவன் தேவனிடத்தில் அவருக்குரிய பாஷையில் பேசுகிறான். அவன் மனுஷ பாஷையில் தேவனிடத்தில் பேசவில்லை. ஆக அந்நிய பாஷை பரலோகத்தில் பேசப்படும் பாஷையாகும்.

7. மேலும் தேவனிடத்தில் அந்நிய பாஷை பேசுகிறவன் தனக்கு பக்திவிருத்தி (சபைக்கு அல்ல) உண்டாக பேசுகிறான். ஒருவேளை அவன் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டது சபை பக்திவிருத்திக்காக என்றால் அவன் தான் தேவனோடு பேசிய பாஷையின் அர்த்தத்தை அவனாகவே சபைக்கு சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவன் அந்நிய பாஷையில் சபையில் பேசக்கூடாது. தேவனுக்கும் தனக்கும் தெரிய

பேசிக்கொள்ள வேண்டும் (1கொரி.14:27,28) அந்நிய பாஷை மனுஷர்களால் யாவராலும் பேசக்கூடாத பாஷை. அது மனுஷருடைய பாஷை அல்ல. ஆதலால் அந்நிய பாஷையில் பேசியதற்கு அவன் அதன் அர்த்தத்தை சபைக்கு சொல்ல வேண்டும் அல்லது அதன் அர்த்தத்தை சபைக்கு சொல்வதற்கு ஒருவர் இருக்க வேண்டும், இல்லாவிட்டால் சபையில் அந்நிய பாஷை பேசக்கூடாது.

8. ஆக அந்நிய பாஷை (unknown tongue) ஒருவன் தேவனிடத்தில் பேசும் பாஷையாகும். நன்கு கவனியுங்கள் அவன் மனுஷனிடத்தில் பேசுவதில்லை மாறாக தேவனிடத்தில் பேசுகிறான் (1கொரி.14:2) வெவ்வேறு பாஷைகளில் பேசுகிறவர்களோ மனிதர்களிடத்தில் மனுஷபாஷைகளில் பேசுகிறார்கள் (அப்.2:4) ஆதலால் அப்.2:4 சம்பவம் அந்நிய பாஷை அல்ல (Not unknown tongue). இவர்கள் பேசியது மனுஷர்கள் பேசும் பாஷைகள். அந்நிய பாஷை மனுஷர்கள் மத்தியில் பேசப்படும் மனுஷர்களுடைய பாஷை அல்ல. கொர்நேலியு வீட்டில் பல பாஷைகள் பேசப்பட்டது. இதுவும் அந்நிய பாஷை அல்ல. மனுஷருடைய பாஷை (அப்.10:46). மேலும் அப்.19:6-ல் பாஷைகள் பேசப்பட்டது (Tongues) இங்கு அந்நிய பாஷை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது தவறு. இவர்கள் மனுஷர் பேசும் பாஷையைத்தான் பேசினார்கள்.

9. பிரியமானவர்களே, நீங்கள் தேவனிடத்தில் பேசும்போது அவர் உங்களுக்கு ஒரு பாஷையை கொடுப்பார். அது மனுஷரில் யாரும் அறியாத பாஷை. அவர்களுடைய பழக்க வழக்கத்திலும் இல்லாத பாஷை. உலகில் பேசப்படும் 6500 பாஷைகளில் இல்லாத, காணப்படாத ஒரு பாஷை. இதுதான் அந்நிய பாஷை (unknown tongue) மற்றபடி பரிசுத்த ஆவியின் வரங்களினால் நீங்கள் பற்பல பாஷைகளை பேசலாம், பாஷைகளை பேசலாம், இவையாவும் மனிதர்களுடைய பாஷை, அந்நிய பாஷை அல்ல. அந்நிய பாஷை தேவன் உங்களோடு பேசும் ஒரு பாஷை. நீங்கள் தேவனோடு பேசுவது ஆகும். சொல்லப்போனால் அந்நிய பாஷை பரலோக பாஷை. ஆக பற்பல பாஷைகளை பேசுவது, அந்நிய பாஷை பேசுவது இரண்டும் பாஷைகள் பேசுவதில் தனித்தனி அனுபவங்கள் ஆகும். ஆக பற்பல பாஷைகளை பேசுதல் மற்றும் அந்நிய பாஷைகளை பேசுதல், இவை இரண்டும் ஒருவன் பரிசுத்த ஆவியை பெற்றுள்ளான் என்பதற்கு அடையாளங்கள் அல்ல. மாறாக ஆவியின் வரங்கள் ஆகும். ஒருவனிடம் காணப்படும் ஆவியின் கனிகளே அவன் பரிசுத்த ஆவியை பெற்றுகொண்டதற்கு அடையாளம்.

10. அந்நிய பாஷை பேசுவதில் ஒழுங்கு முறைகள் உண்டு.

அ. யாராவது அந்நிய பாஷை (unknown tongue) பேசுகிறதுண்டானால் அதை இரண்டு பேர் மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்க வேண்டும்.
ஆ. அந்நிய பாஷை ஒவ்வொருவராய் பேச வேண்டும். ஒரே நேரத்தில் அனைவரும் பேசக்கூடாது.
இ. பேசப்படும் அந்நிய பாஷைக்கு பேசுகிறவர் அர்த்தம் சொல்ல வேண்டும்.
ஈ. பேசப்பட்ட அந்நிய பாஷைக்கு அர்த்தம் சொல்லுகிறவர் இல்லாவிட்டால் சபையில் பேசக்கூடாது. (1கொரி.14:27,28)

11. சிலர் பேசும் :
ஷிரபல ஷங்கர ரிலபலா
ரிக்கல பல ரிப்பர ரிப்பர மற்றும்
சுந்தர நந்தர கற்ற கந்தே
ஏரீபட கந்தட பூதட பூதட நந்தர
என்பதெல்லாம் பிசாசின் வஞ்சகம். இது அந்நிய பாஷை பெயரில் பிசாசின் வஞ்சிப்பு. தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவு இல்லாத, பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெறாத இந்த திரித்துவ வழிப்பாட்டினருக்கு தேவன் எப்படி தம்முடைய இரகசியங்களை வெளிப்படுத்துவார்? கிறிஸ்துவினுடைய ராஜ்ஜியத்தில் இவர்களுக்கு பங்கு ஏது? இவர்கள் நிச்சயமாக தேவனோடு அந்நிய பாஷையில் உறவாட முடியாது. அந்த தகுதியும் இவர்களிடம் இல்லை. மாறாக இவர்கள் பிசாசினால் ஏவப்பட்டு, தூண்டப்பட்டு அந்நிய பாஷை என்ற பெயரில்

மேற்கண்டபடி ஏதோ ஒன்றை உளறி மக்களை வஞ்சிக்கிறார்கள். வெண்ணிற ஆடைகளே, நீங்கள் பேசும் பற்பல பாஷை மற்றும் அந்நிய பாஷை அனைத்தும் போலியானது, மாயையானது என்பதை உங்களால் உணரமுடிகிறதா? உங்களால் தேவனுடைய நாமம் மகிமைப் படுகிறதென்று நினைக்கிறீர்களா? இல்லை, இல்லை. மாறாக தூஷிக்கப்படுகிறது என்பதை நீங்கள் உணர்ந்து சிந்தித்து செயல்படுவீர்களா?

12. மறைந்த சகோ.சாம் ஜெபத்துரை (அன்றன்றுள்ள அப்பம்) மற்றும் Dr. புஷ்பராஜ் (ஜாமக்காரன்) இருவரும் எழுதிய அந்நிய பாஷைக்கடுத்த உபதேசங்கள் பரத்திலிருந்து வருகிற ஞானத்தினால் எழுதப்பட்டது அல்ல. நான் இவர்களுடைய உபதேசங்களுக்கடுத்த காரியங்கள் குறித்து உங்களுக்கு எழுதி வைத்துள்ள குறிப்புகள் அநேகமுண்டு. அந்த தொகுப்பிலிருந்து ஒரு பகுதியை எடுத்துத்தான் நான் இந்த நிருபத்தை எழுதியுள்ளேன். கர்த்தருக்கு சித்தமானால் முழுமையாக கொரோனா ஊரடங்கு முடிந்து சுமூகநிலை திரும்பியவுடன் வெளியிடுகிறேன்.

13. முடிவாக இந்த பற்பல பாஷைகள் பேசுதல், அந்நிய பாஷையில் பேசுதல் அனைத்தும் கிறிஸ்துவின் சரீரமாகிய காணக்கூடாத சபை எடுத்துக் கொள்ளப்படும் வரை சபையில் நிலைத்திருக்கும். அதுவரை இது ஓய்ந்து போகாது. ஏனென்றால் இந்த வரங்கள் யாவும் ஒரு தனிப்பட்ட நபருடைய பக்திவிருத்திக்காகவும், சபையின் பக்திவிருத்திக்காகவும் கொடுக்கப்பட்டுள்ளது. சத்திய ஆவி உங்களை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்துவாராக. தேவவசனம் உங்களில் நிலைத்திருப்பதாக. கிருபையானது உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக.

**ஜூலை 2020, வாட்ஸ்ஆப் செய்தி.**

**கிறிஸ்துவின் அன்பில்**
**சகோ.காலேப் யோசுவா**